முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் ஆனாய நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

13.11.2018, செவ்வாய்க்கிழமை

1. **அருட்சுடராக வந்த குருவே**
**அறமாக சேவை ஆற்றுகின்ற**
**அருட்பெருஞ்சக்தியே அரங்கா**
**அகிலமதில் உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி துலை திங்கள்**
**தெரியவே இருபானேழ் திகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 27ம் நாள் 13.11.2018, செவ்வாய்க்கிழமை)**
**தேசிகனுக்கு ஆனாய நாயனார் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான அரங்கன் சொல்லும்
ஞான விளக்கமே கலியுகத்தில்
ஞானயுகம் படைக்கும் என்பேன்
4. என்கவே அன்னதான நெறியுடன்
எங்கும் சைவ நெறி தழைக்க
துன்பமான சூழல்கள் மாறும்
தேசமே ஞான பலம் பெறும்
5. பலம் தரும் தருமத்தின் ஞானி
பாருலகை ஆள வந்த யோகி
வளம் தரும் ஞான தேசிகனை
வணங்க வையகம் தேறும்
6. தேறுமே கலிமீட்பின் சேவை
தெய்வீக நெறியாக பரவிட
ஆறுமுகன் ஆளுமைக்கு உண்டான
அற்புதம் கலியில் நடந்தேறும்
7. தேறவே கலிகால மக்களே
தேசிகனை நோக்கி வாரீர்
கூறவே ஆசி தீட்சையுடன்
குறையிலா தருமம் பெருக்கிவர
8. வருகவே ஆளுமை தன்னில்
வல்லமையான சூழல் கனியும்
முருகா எனும் செபதபங்கள்
முழுமதி பூசைகளும் தேசமெங்கும்
9. எங்கும் ஞானிகள் பூசையாக
இனிதே நடந்து வருக
பங்கமான கொலை களவு
பழிபாவச் செயல்கள் விலகும்

10. விலகியே பாதுகாப்பான நிலை
வினைபற்றா பெருவாழ்வும்
கலகமில்லா சமாதான வாழ்வும்
கலியுகமே சமத்துவம் பெருகி

11. பெருகியே எங்கும் எதிலும்
பேராசான் அரங்கன் வெளிப்பாடாக
முருகன் ஆளுமை உருவாகும்
மொழிந்திட்ட ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் ஆனாய நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

உயர் ஞானம் வெற்றி பெற்று அருட்பெருஞ்ஜோதி சுடராக வந்துதித்த சற்குருவே அறத்தினையே தர்மம் செய்வதையே கொள்கையாக தொண்டாக செய்து வருகின்ற அருட்பெருஞ்சக்தி வடிவமே அரங்கமகாதேசிகனே இவ்வுலகினில் உமது பெருமைகளைக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 27ம் நாள் 13.11.2018, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே ஆனாய நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் ஆனாய நாயனார்.

முருகப்பெருமானின் அவதாரம் அரங்கன் சொல்லுகின்ற ஞான உபதேச விளக்கங்களே கலியுகத்தின் தன்மையை மாற்றி ஞானயுகமாக படைத்திடும் என்பேன் ஆனாய நாயனார் யானும்.

உலகினில் ஞானம் அளிக்கும் வல்லமைமிக்கதான அறமாகிய அன்னதான நெறி பரவி உலக மக்கள் கொல்லா நெறியைக் கொண்ட சைவநெறியினை கடைப்பிடித்து வரவர, உலகின் துன்பமான சூழல்கள் எல்லாம் மாறும். இந்த பாரததேசமே பலம்மிக்க தேசமாக மாறிடும்.

சர்வபலத்தினையும் தந்தருளும் தருமத்தின் மகா ஞானி பாருலகை ஆளவே அவதாரமாக வந்துதித்த ஞானயோகி எல்லா வளங்களையும் தந்தருளும் ஆறுமுக அரங்கமகா தேசிகனை மக்கள் வணங்க வணங்க இந்த உலகமே துன்பத்திலிருந்து மீண்டு தேற்றம் அடையும். கலியுக மீட்பின் தொண்டுகள் உலகமெங்கும் தெய்வீக நெறியாக பரவிட முருகப்பெருமான் ஆட்சி செய்வதற்கு தேவையான அற்புதங்கள் எல்லாம் கலியுகத்தினில் நடந்திடும்.

உலக மக்களே கலியுகத்தின் துன்பத்தில் சிக்குண்டு துன்புறும் கலியுக மக்களே நீங்கள் ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள வேண்டுமாயின் முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலை நாடி வாருங்கள். ஓங்காரக்குடிலினை நாடி வந்துமே குடில் தலைவன் ஆறுமுக அரங்கன் திருவடியே கதியென பணிந்து வணங்கி தீட்சை உபதேசம் அடைந்திடுங்கள். தீட்சை உபதேசம் பெற்று ஆங்கே அரங்கன் நடத்துகின்ற தானதருமப் பணிகளுக்கு தாராளமாய் பொருளுதவிகளைச் செய்து வாருங்கள். இவ்விதம் செய்திட நாட்டினில் உள்ள ஆட்சி நல்லாட்சியாக மாறிடும் வல்லமைமிக்க சூழல் உருவாகும்.

நாட்டு மக்களெல்லாம் முருகா, முருகா, முருகா என மனம் உருகி முருகப்பெருமானின் திருநாமங்களை ஜெபித்து வருவதுடன் அரங்கன் உலக நலன் கருதி நடத்துகின்ற பௌர்ணமி பூஜைகளிலும், பல ஞான பூஜைகளிலும் கலந்து வருவதுடன் நாடு முழுதும் பூஜைகளை முருகப்பெருமான் பெயரில் செய்து வர, நாட்டினில் உள்ள தீமையான செயல்களான கொலை பாதக செயல்களும் களவு, பழிபாவச் செயல்கள் எல்லாம் விலகி நாடு முழுவதும் பாதுகாப்பான சூழ்நிலை உருவாகும்.

நாட்டின் மக்களெல்லாம் வினை சூழாத பெருவாழ்வை கலகம் ஏதும் இன்றி சமாதானத்துடன் வாழ்ந்து சிறப்படைவார்கள். கலியுகத்தினில் பேதாபேதங்கள் நீங்கி சமத்துவம் பெருகி எங்கும் எதிலும் பேராசான் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வெளிப்பாடு உண்டாகி முருகப்பெருமானின் ஞானஆட்சி உலகமெங்கும் உருவாகிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் ஆனாய நாயனார்.

–சுபம்–